**சார்பு நீதிமன்றம், பரமத்தி**

முன்னிலை திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஜூன் மாதம் 11–ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.03/2025 இன் அசல் வழக்கு எண். 87/2022**

மோகன் ... மனுதாரர்கள்/2–ம் பிரதிவாதி

/ எதிர் /

வளர்மதி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 23.04.2025–ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு, வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 8 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2, மனுவின் சுருக்கம்

மனுதாரர், மேற்படி மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கை பாகப்பிரிவினை கோரி செய்துள்ளார். மனுதாரர் தாவா தாக்கல் செய்த பிள்னிட்டு அவர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்திருந்தார். அதன்பின்னர் 1–ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்யாமல் Ex–Party–ஆக இருந்து

பின்னர் அவர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 1–ம் பிரதிவாதி, மனுதாரர் சிறு வயதாக இருக்கும் போது தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கடந்த 14.06.1990 தேதியில் மனுதாரருக்கு வழங்கியுள்ளார். மேற்படி பத்திரம் அமுலுக்கு வந்து மனுதாரர் அனுபவித்து வரும் நிலையில், மனுதாரரின் தங்கையான எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கினை தொடர்ந்துள்ளார். மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்த பின்னர் 1–ம் பிரதிவாதி மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 14.06.1990 ஆம் தேதியில் ஏற்படுத்தியுள்ள பாகப்பிரிவினை ஆவணத்திற்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர் வழக்குரையில் கடந்த 14.06.1990–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்கள் குடும்ப சொத்தாக இன்றளவும் இருப்பதாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டும் வேண்டுமென்றே மனுதாரருக்கு இன்னலும், இழப்பும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் லாரி டிரைவர் என்பதால் வட நாட்டிற்கு அடிக்கடி லாரி ஓட்டி சென்றுவிடுவதால் மனுதாரர் வழக்கறிஞரை சந்தித்து 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படிக்க முடியாமல் போய்விட்டது. இந்நிலையில் மேற்படி 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மனுதாரருக்கு எதிராக பல்வேறு புதிய சங்கதிகளை மோசடியாக தெரிவித்துள்ளதோடு 1–ம் பிரதிவாதியும், வாதியும் வஞ்சகக்கூட்டுடன் நடந்துகொள்வது தெரியவருகிறது. ஆகையால், மேற்படி சங்கதிகளை பொறுத்து மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் காலதாமதத்துடன் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர் வழக்குரையை ஏற்றுக்கொண்டு உத்திரவிடாவிடில் மனுதாரருக்கு மிகுந்த இன்னலும், இழப்பும் ஏற்பட்டுவிடும். மனுதாரருக்கு வழக்கில் நல்ல கட்சி உள்ளது. ஆகையால் காலதாமதத்துடன் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் எதிர் வழக்குரையை ஏற்றுக்கொண்டு உத்திரவு பிறப்பிக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிருரைச்சுருக்கம்

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மோசடியானது. சட்டப் படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடியாகத்தக்கது. இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யானது. வாதி, 1–ம் எதிர்மனுதாரடன் கூட்டு சேர்ந்து நடந்து கொள்வதாக கூறியுள்ளது உண்மையில்லை. கடந்த 14.06.1990–தேதியில், 2–ம் பிரதிவாதி சிறு வயதாக இருக்கும்போது, 1–ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மையில்லை. மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டுள்ளது. அது வாதியை கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வந்ததாக கூறியுள்ளது உண்மையில்லை. 1–ம் பிரதிவாதி மட்டும் தாவா 1–ம் அயிட்டச்சொத்தை அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளது உண்மையில்லை. ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிடவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் கூறியுள்ள காரணங்களை ஏற்று, இந்த மனு அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

6. தீர்வு

இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், மனுதாரர் சிறு வயதாக இருக்கும்போது, 1–ம் பிரதிவாதி, கடந்த 14.06.1990–தேதியில், தாவா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து, மனுதாரருக்கு வழங்கியுள்ளார் என்றும் மேற்படி ஆவணம் அமலுக்கு வந்து, வழக்கு சொத்தை மனுதாரர் அனுபவம் செய்து வரும் நிலையில், மனுதாரரின் தங்கையான எதிர்மனுதாரர் பாகப்பிரிவினை கோரி, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அதில், மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு, அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 14.06.1990–தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்றும் தாவா சொத்து குடும்ப சொத்தாக உள்ளது என்று கூறியுள்ளார் என்றும் அதனால், 1–ம் பிரதிவாதி, வாதியுடன் சேர்ந்து கொண்டு, நடந்து கொள்வது தெரிய வருகிறது என்றும் இது சம்பந்தமாக கூடுதல் எதிர்வழக்குரையை காலதாமதமாக தாக்கல் செய்துள்ள தாகவும், அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், வாதியும், 1–ம் பிரதிவாதியும் வஞ்சக கூட்டுடன் நடந்து கொள்வதாக சொல்லியுள்ளது உண்மையில்லை என்றும் 14.06.1990–தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில், மனுதாரருக்கு, 1–ம் பிரதிவாதி சொத்துக்களை கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மையில்லை என்றும் மேற்படி ஆவணம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் 1–ம் அயிட்ட சொத்தை மட்டும் 1–ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளது உண்மையில்லை என்றும் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்களும் ஆவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி, அசல் வழக்கு பாகப்பிரிவினை கோரி, எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் பாகம் கோரி, அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில், இம்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்களை பொறுத்து, இம்மனுதாரர் மைனராக இருந்தபோது, 1–ம் பிரதிவாதி கடந்த 14.06.1990–தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் தாவா சொத்துக்களை மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால், அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பெயரளவிற்கு ஏற்பட்டது என்றும் அது நடைமுறைக்கு வரவில்லை என்றும் தாவா சொத்துக்கள் தற்போதும் பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்தாக இருப்பதாக ஆட்சேபணை செய்துள்ளார். எனவே, மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் தரப்பினரான 1–ம் பிரதிவாதி மேற்படி ஆவணத்திற்கு எதிராக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுப்பதற்காக மனுதாரர் தற்போது இம்மனுவுடன் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆகவே, மேற்படி விவரங்களை பார்க்கும்போது, மனுதாரர் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு 1–ம் பிரதிவாதி மேற்கண்ட பாகப்பிரிவினை பத்திரத்திற்கு எதிராக கூறியுள்ள சங்கதிகளை மறுப்பதற்காக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் உண்மையானது இல்லை என்று எதிர்மனுதாரர் எதிருரையில் ஆட்சேபணை செய்துள்ளார். ஆனால், மேற்படி சங்கதிகளின் உண்மைத்தன்மை குறித்து, இம்மனுவில் பரிசீலிக்க இயலாது. அவைகளை அசல் வழக்கு விசாரணை முடிவில் தான் தீர்மானிக்க இயலும். மேலும், மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரையில் அவர் ஏற்கனவே அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளுக்கு மாறான விவரங்களை கூறியுள்ளார் என்று இம்மனுவின் எதிர்மனுதாரர் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. மேலும்,

அசல் வழக்கு விசாரணை தற்போது ஆரம்ப நிலையில் உள்ளது. எனவே, மனுதாரர் அசல் வழக்கில் அவர் தரப்பு வழக்கை கூறுவதற்கு உரிய வாய்ப்பு வழங்கவேண்டும். ஆகவே, இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆனால், வழக்கு விவரங்களை பார்க்கும்போது, அசல் வழக்கு கடந்த 2022–ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது வா.சா.1–குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டுள்ள நிலையில், மிகவும் காலதாமதமாக மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் நடவடிக்கைகளால் அசல் வழக்கு விசாரணையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி காலதாமதத்தால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட சிரமத்தை ஈடு செய்யும் வகையில் செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு மனுதாரர் செலவுத்தொகையாக ரூ.1,000/–த்தை எதிர்மனுதாரருக்கு 02.07.2025–ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 02.07.2025.

என்னால் இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11–ஆம் நாள் அவையறியத்தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.06.11 14:21:39 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.06.11 14:21:43 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.